செய்தி வெளியீடு எண்:205 நாள்: 13.04.2017

## <u>செய்தி வெளியீடு</u>

## <u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தலைமையில் வறட்சி நிவாரணப் பணிகள் மற்றும் குடிநீர் திட்டப் பணிகள் குறித்து ஆய்வு.</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தலைமையில் வறட்சி நிவாரணப் பணிகள் மற்றும் குடிநீர் திட்டப் பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் இன்று (13–04–2017) தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு இடுபொருள் மானியம் வழங்கும் பொருட்டு ரூ.2247 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிவாரணம் வழங்கப்பட்டு வருவதன் முன்னேற்றம் ஆய்வு செய்தும், பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய காப்பீட்டுத் தொகையினை விரைந்து வழங்கிடவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

வறட்சியால் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள குடிநீர் தட்டுப்பாட்டினை சமாளிப்பதற்காக ரூ.501.70 கோடி மதிப்பில் பல்வேறு துறைகளின் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து ஆய்வு செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அப்பணிகளை விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்கள். மேலும், எதிர்வரும் கோடைகால குடிநீர் தேவையை சமாளிக்கும் பொருட்டு, மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 25 கோடியுடன் கூடுதலாக ரூ. 40 கோடியும், நகராட்சி நிர்வாகத் துறைக்கு ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 30 கோடியுடன் கூடுதலாக ரூ. 35 கோடியும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 25 கோடியுடன் கூடுதலாக ரூ. 25 கோடியும், **ஆக மொத்தம் கூடுதலாக குடிநீர் திட்டப்பணிகளுக்கு ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் உத்தரவிட்டார்கள்.**

வறட்சியின் காரணமாக ஏற்பட்டுள்ள கால்நடை தீவனப் பற்றாக்குறையினை தீர்க்கும் வகையில் மாநிலம் முழுவதும் 290 தீவனக் கிடங்குகள் மூலமாக ரூ.10.17 கோடி மதிப்பிலான 8,915 டன்கள் உலர்தீவனம் மானிய விலையில் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. வரும் **ஏப்ரல் மற்றும் மே மாதங்களுக்கு கால்நடை தீவன தேவைகளுக்காக மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து கூடுதலாக ரூ.20 கோடி ஒதுக்கீடு செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.**

மேலும், அனைத்து குடிநீர் திட்டங்களிலும், பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படும் குடிநீர் நல்ல தரமானதாக இருப்பதை உறுதி செய்த பின்னரே வழங்க வேண்டும் என்று அனைத்துத் துறை அதிகாரிகளுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

**மாவட்டங்களில் நடைபெற்று வரும் வறட்சி நிவாரணப் பணிகள், குடிநீர் திட்டப்பணிகள் மற்றும் இதர அரசு நலத் திட்டங்கள் குறித்து மாவட்டங்களில் ஒருவார காலத்திற்குள் கள ஆய்வு செய்து தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ள மாவட்ட அமைச்சர்கள் மற்றும் மூத்த இந்திய ஆட்சிப்பணி நிலையிலான கண்காணிப்பு அலுவலர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.**

இக்கூட்டத்தில், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.பி. தங்கமணி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி, மாண்புமிகு மீன் வளம், நிதி, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு.டி.ஜெயகுமார், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.இரா. துரைக்கண்ணு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு.ஆர்.பி. உதயகுமார், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., நிதித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., முதன்மை செயலாளர் / வருவாய் நிர்வாக

ஆணையர் முனைவர் கொ. சத்யகோபால், இ.ஆ.ப., மற்றும் பல்வேறு துறை சார்ந்த அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 13.04.2017**